*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

**ISSN: 2456 – 4613**
**Volume VII (2)**
**May 2023**

# தொல்காப்பியத்தில் பிரிவு

பாத்திமா,செ.
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி,
தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding Author's mail id: fathima.sphd@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று இலக்கணங்களையும் தெளிவுற எடுத்துரைக்கின்றது. தொல்காப்பியப் பொருளதிகாரம் மக்களின் அகம், புறம் ஆகிய வாழ்க்கை முறைகளை எடுத்துரைக்கின்றது. அகவாழ்க்கையில் தலைவன், தலைவி ஆகியோரின் காதல் வாழ்க்கையும், கற்பு வாழ்க்கையும் விளக்கப்படுகின்றன. இவ்வின்ப வாழ்க்கையின் இடையே துன்பம் தரும் நிகழ்வாகப் 'பிரிவு' அமைகின்றது. 'காலை இருள் கடுகி வந்தாலே மாலை இருளும் மயங்கி வரும் என்பது திண்ணம்'. அதைப் போல் உறவுகளுக்கிடையே இன்பமும், துன்பமும் மாறி மாறி வரும். இத்தகைய பிரிவு பற்றிய செய்திகளைத் தொல்காப்பியம் எங்ஙனம் வரையறுத்து வகைமைப்படுத்தி விளக்குகின்றது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**கருச்சொற்கள்: தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், கற்பியல், பிரிவுகள், செலவழுங்கல்.**

## முன்னுரை

இறைவனின் படைப்பில் சிறந்த படைப்பு மனிதப் படைப்பு ஆகும். மனிதனைப் படைத்தது மட்டுமின்றி அவனுள் உணர்வுகளையும் எழச் செய்வதே இறைவனின் சிறந்த படைப்பாகும். ஆண், பெண் இருவரையும் படைத்து அவர்களிடையே காதலை உருவாக்கி அதன் வழி வாழ்க்கையை இறைவன் வகுத்துத் தருகின்றான். ஆனாலும் ஆண், பெண் இருவருக்குமிடையே உணர்வுகளால் சில கருத்து வேற்றுமைகள் ஏற்படுவதுண்டு. அங்ஙனம் ஏற்படும் போது பிரிவு என்பது இயல்பாகத் தோன்றுகிறது. மனிதனின் அகவாழ்க்கையிலும் சில பிரிவுகள் ஏற்படுகின்றன. தொல்காப்பியம் இப்பிரிவுகள் குறித்துக் கூறுவனவற்றைக் காணலாம்.

**அறிஞர் கருத்து**

சுப்புரெட்டியார் என்னும் அறிஞர், "களவு ஒழுக்கத்தில் இருக்கும் பொழுது ஒரு நிமித்தத்தின் பொருட்டோ அல்லது ஒரு வினையின் பொருட்டோ தலைவன் தலைவியை விட்டுப் பிரியும் வழக்கம் இல்லை. அவன் தலைவியை மணந்து கொண்டு இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் பொழுதுதான் தலைவியை விட்டுப் பிரியும் வாய்ப்புகள் நேரிடும் கட்டங்கள் ஏற்படும்"[1] என்கிறார்.

‘‘பிரிவு என்பது தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல்"[2] என்று பிரிவிற்கான விளக்கத்தைப் புலவர் குழந்தை கூறுகின்றார்.

**தொல்காப்பியம் - செலவழுங்கல்**

தலைவன் பொருள் ஈட்டுதல் காரணமாகப் பிரிய நினைக்கும் போது தோழி அவன் செலவினைத் தடுப்பது செலவழுங்கல் எனப்படும். தலைவன் களவில் வரைவு காரணமாகவும், கற்பில் போர், பொருள் காரணமாகவும் பிரிவது மரபாகும். இதனைக் கூற வந்த தொல்காப்பியர்,

> **‘‘செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே**
> **வன்புறை குறித்தல் தவிர்ச்சி யாகும்’’[3]**
>
> **(தொல்., பொருள்., கற்பு., நூ.183)**

என்கிறார். தலைவனின் செலவினைத் தோழி உணர்ந்த போது, தலைவியை உடன் அழைத்துச் செல்லுமாறு வேண்டுகிறாள். தலைவன் பொருள் தேடச் செல்வதில் தோழிக்கு வருத்தம் இல்லை. தலைவியை விடுத்துத் தனித்துச் செல்வதே தோழி, செலவழுங்குவித்தலுக்குக் காரணமாகும்.

தலைவியை வரைந்து கொள்வதற்காகக் களவில் தலைவன் பொருள் காரணமாகப் பிரிந்து செல்வான். களவியலில் தலைவி, தோழி ஆகியோருடன் சொல்லிவிட்டுத் தலைவன் பிரிவதில்லை. கற்பில் பரத்தையற் பிரிவு தவிர்த்த பிற பிரிவுகளைக் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் உணர்த்தும் மரபு காணப்படுகிறது.

**பிரிவு**

தலைவன் தலைவியை மணந்து இல்லறம் நடத்தும் பொழுது பல காரணங்களுக்காக அவளை விட்டுப் பிரிந்து செல்லுவது தவிர்க்க முடியாதது என்பது அகநெறியாகும். தலைவன் தலைவியை மணந்து கொண்டு இல்லறத்திலிருந்து நல்லறம் செய்வதே கற்பொழுக்கம் எனப்படும். கற்பொழுக்கத்தில் இன்பம் செய்விப்பது பிரிவேயாகும். இல்லற நடைமுறை இனிப்பு உண்பது போன்றது. இனிப்பின் சுவையைக் காரம் உண்டு உணர்வது போலவும் மிகுதிப்படுத்திக் கொள்வது போலவும் அமைவது பிரிவாகும். அப்பிரிவு ஓதல், பகை, தூது, காவல், பொருள், பரத்தை என்று ஆறு வகைப்படும். இவற்றின் காரணமாகப் பிரிந்த போது தலைவனுக்கும் தலைவிக்கும் ஏற்படும் இன்ப, துன்ப உணர்வுகள் அவர்களாலேயே உணரத்தக்கதாகும்.

தலைவன் தலைவி பிரிவில் தோழி, பாங்கன் ஆகியோர் வாயில்களாகச் செயல்படுகின்றனர். தலைவன், தலைவி வாழ்க்கையைச் சிறப்பாக நடத்துவதற்கு

இவ்வாயில்கள் வழி வகுக்கின்றன. தலைவன், தலைவியின் துன்பமும் இன்பமும் அவ்வின்பத்தை எண்ணியும், சொல்லியும் அனுபவித்தல் உண்டு. கற்பொழுக்கத்தைச் செய்யுளில் அமைத்துப் பாடும்போது பிரிவு நிகழ்ச்சியும் பிரிவால் வரும் துன்பமும் பின்வரும் இன்பமும் ஆகிய நிகழ்ச்சிகளே சிறப்பாக அமையும். அதனால் தான் இலக்கண நூலார் பொருளிலக்கணத்துக் கற்பியலில் பிரிவு பற்றியே பெரிதும் கூறுவாராயினர்.

**பிரிவின் வகைகள்**

தலைவன் தலைவியை ஏதேனும் ஒரு காரணத்தின் பொருட்டுப் பிரிந்து செல்லும் மரபு பழந்தமிழகத்தில் இருந்தது. ஓதல், பகை, தூது, காவல், பொருள், பரத்தை காரணமாகக் கற்பில் பிரிவு நிகழும். களவுக்காலத்தில் திருமணத்திற்குப் பொருள் தேடச் செல்லும் பொருள்வயிற் பிரிவு மட்டுமே உண்டு. பிற பிரிவுகள் இல்லை.

**ஓதல் பிரிவு**

தலைவன் தலைவியை விட்டுச் செல்லும் பிரிவுகளில் ஓதலுக்காகப் பிரிந்து செல்லுதல் ஒன்றாகும். அதாவது அயல் நாடுகளுக்குச் சென்று அந்நாட்டுப் பழக்க வழக்கங்கள், கலை நுட்பங்கள், தொழில் நுணுக்கங்கள், வணிக இயல்புகள், அரசியல் முறைகள் ஆகியவற்றைக் கற்றுத் தெரிந்து வரும் பொருட்டுப் பிரிந்து செல்வது, ஓதற் பிரிவைக் குறிப்பதாகும். இதனை,

**"வேண்டிய கல்வி யாண்டு மூன்று இயலாது"**

**(தொல்., பொருள்., அகம்., நூற்பா 47)**

என்று தொல்காப்பியர் கூறுவதிலிருந்து அறியாலம். ஓதற் பிரிவு என்ற ஒரு பிரிவினைத் தலைவனுக்கு உரிமையாக்குகிறது தொல்காப்பியம். ஈண்டு ஓதல் என்பது உலகியல் நூல்களைப் படித்தல் என்பதற்கில்லை. உலகியல் அறிவு பற்றிய கல்வியிற் கரைகண்டவனே தலைவன் என்பதற்கு உரியவன். மனையறம் ஏற்றபின் மனையாளை விட்டுச் சென்று கற்கும் கல்வி பற்றிய பிரிவே ஈண்டு "ஓதற்பிரிவு" என்பதாகும்.

"மனமாசு கழித்தற்கெனவே மனையறம் மேற்கொண்டு தன்னலமற்றுக் கடமைகளைச் செய்வதால், விரும்பிய மனமாசு கழிந்ததும், அம்மாசற்ற மனங்கொண்டு மெய்யுணர்வு பெறுவதற்காக இன்றியமையாது வேண்டப்படும் கல்வி கற்றற் பொருட்டே ஓதற் பிரிவினைத் தலைவன் மேற்கொள்வான் என்பதும், மெய்யுணர்வு நல்குவான் என்பதும், அவ்வுணர்வால் இருவரும் மனமாசு கழிந்து மெய்யுணர்வு பெற்றமையால் உயிர் நிறைவு எய்தி, நீக்கமற நிறைவாய் இலங்கும் அப்பெரும் பொருளோடு கலந்து இனிப் பிறவாப் பெற்றிமை எய்துவர் என்பதும் தொல்காப்பியர் கருத்தாம் என நாம் கொள்ளுதல் தவறாகாது"[4] என்று டாக்டர் மொ.அ. துரைஅரங்கசாமி கூறியுள்ளார்.

கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போதே திருமணம் நிகழ்வதும் உண்டு. அதற்காகக் கல்வியை நிறுத்திவிடாமல் அதைத் தொடர்ந்து முடிக்க வேண்டும். இதற்காகவும் தலைவியைப் பிரிய நேரிடும்

அல்லது திருமணத்திற்குப் பின்னால் உயர் கல்வி கற்பதற்காகவும் பிரிவு ஏற்படும். எங்ஙனமேனும் இப்பிரிவு மூன்றாண்டுகளுக்கு மேல் செல்லக்கூடாது. அக்காலத்திற்குள் கல்வியை முடித்துக் கொண்டு தலைவியோடு உறைதல் வேண்டும். கல்வி வேற்றிடத்தில் சென்று பயில்வதால் நீண்ட காலம் தேவைப்படும். ஆதலினாலும் அதற்கு மட்டும் மூன்றாண்டு என்று கூறியுள்ளார்கள்.

**தூதிற் பிரிவு**

பகை கொண்ட இருவரின் பகையை நீக்கி ஒன்று கூடி நல்லுறவு வளர்ப்பதற்காகப் பிரிந்து செல்வது தூதிற் பிரிவு எனப்படும். தூது என்பதற்கு உடன்பாடு, சந்து எனப் பொருள்கள் கூறப்படுகின்றன. அந்தணர், அரசர் பெரும்பான்மையாகவும், வணிகர், வேளாளர் சிறுபான்மையாகவும் தூது செல்வதற்கு உரிமையுடையோர் ஆவார்கள். இதனை,

**"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன"[5]**

**(தொல்., பொருள்., அகம்., நூ.28)**

என்கிறது தொல்காப்பியம். உயர்ந்தோர் என்பவர் செல்வம், அறிவு ஆகியவற்றில் உயர்ந்தவர்கள் ஆவார்கள். சங்க காலத்தில் புலவர்கள் தூது சென்று போர் ஏற்படுவதைத் தடுத்துச் சமாதானம் செய்து வைத்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஔவையார். இவர் தூது சென்று போர் ஏற்படுவதைத் தடுத்தவர். நாட்டில் அமைதி குலைந்தால் குடிமக்களின் வாழ்வு சிதையும், குடிமக்களின் வாழ்வு சிதைந்தால் காதல் வாழ்வு கருகிவிடும். காதல் வாழ்வு கருகிவிட்டால் மக்களிடம் அன்பும் அமைதியும் நல்வாழ்வும் வளர இடமில்லை. போர்க் காலத்தில் உழவுத் தொழிலைச் சரிவரச் செய்ய முடியாத நிலை ஏற்படும்.நாட்டில் பஞ்சம், பட்டினி ஏற்படும். ஆகையால், "தொல்காப்பியர் காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தினர் போரை விரும்பவில்லை"[6] என்கிறார் சாமி சிதம்பரனார்.

**பகைவயிற் பிரிவு (அ) துணைவயிற் பிரிவு**

தன் நாட்டின் மீது படையெடுத்து வந்த அயல்நாட்டவரோடு போரிட்டு அவர்களை அடக்கும் பொருட்டுத் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்வான். இது பகைவயிற் பிரிவு எனப்படும். இதனை,

**"தானே சேறலுந் தன்னொடு சிவணி**
**ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே"[7]**
**(தொல்.,பொருள்.,அகம்.,நூ.29)**

என்கிற நூற்பாவால் அறிய முடிகிறது.

தன் நாட்டின் மீது படையெடுத்து வந்தானோடு மன்னர் இருவர் தம்முட் பகை கொண்டு போர் தொடுக்கின்றனர். அவர்களில் ஒருவற்குப் படைத்துணையாகச் செல்லுதல் வேந்தர்க்கு உற்றுழிப் பிரிவு (அ) துணைவயிற்பிரிவு எனப்படும். இந்தத், துணைப் பிரிவும் பகைப் பிரிவேயாகும். எனவே, தன் பகைக்கும் பிறர் பகைக்கும் பிரிதலான், பகைப் பிரிவு இருவகையாயிற்று, இருப்பினும் இப்பிரிவு பெரும்பாலும் ஆற்றார்க்கே துணையாக அமைவது. இவற்றில் பகை காரணமாகப் பிரியும் அரசன் தான் செல்வதோடு மட்டுமல்லாது தன்னொடு சேர்ந்த (அ) தன்னொடு நட்புக் கொண்ட குறுநில மன்னர்களையும் அழைத்துச் செல்லுதல் உண்டு. இதனை,

**"மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப"[8]**
**(தொல்.,பொருள்.,அகம்.,நூ.32)**

என்ற நூற்பாவால் அறியலாம்.

மன்னர்க்குரிய பகைவயிற் பிரிவானது அவர்க்குப் பின்னுள்ள வணிகர், வேளாளர், ஆகியோருக்கும் உண்டு என்பதை, இளம்பூரணர் உரை வழி அறிய முடிகிறது.

**காவற் பிரிவு**

ஒரு நாட்டில் நல்லவர்களும் நல்லவர் அல்லாதவர்களும் இருப்பது இயல்பு. இவ்வேறுபாட்டால் நாட்டு மக்களிடையே உண்டாகும் சீர்கேட்டைத் திருத்தியமைத்து நல்லாட்சி அமைப்பது அரசின் கடமை. பகை மன்னர்களால் இடையூறு இல்லாமல் மக்களைக் காக்கும் பொருட்டுப் பிரிந்து செல்வது காவற்பிரிவாகும். நாடு காவலின் பொருட்டுப் பிரிவதும் உண்டு. பண்டையத் தமிழ் அரசர்கள், நாட்டையும், அரசையும் இரு கண்களாகப் பேணி வந்தனர். இதனை,

> **“முல்லை முதலாகச் சொல்லிய முறையால்**
> **இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே”[9]**
> **(தொல்.,பொருள்.,அகம்.,நூ.30)**

என்கிறது தொல்காப்பியம். முல்லை முதலாகச் சொல்லப்பட்ட நால்வகை நிலத்தினும் மேவிய சிறப்பையுடைய மக்களையல்லாத தேவராகிய மாயோன் முதலிய நால்வர்க்கும் பூசையும் விழாவும் எடுத்தற் காரணமாகவும், அந்நால்வகை நிலத்திலுள்ள மக்கள் அத்தகைய முறைமை தப்பிய வழி அறம் நிறுத்தல் காரணமாகவும், பொருளாக்குதல் காரணமாகவும் அரசனுக்குப் பிரிவு ஏற்படும்.

**பொருள்வயிற் பிரிவு**

களவில் தலைவியை மணக்கும் பொருட்டுத் தலைவன் பொருள் தேடிப் பிரிந்து செல்வான். இது வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு எனப்படும். தன் முன்னோர்கள் ஈட்டிய பொருள் தனக்கு நிரம்ப இருப்பினும் தனது முயற்சியால் ஈட்டிய பொருளைக் கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு தலைவனுக்குப் பொருள்வயிற் பிரிவு நிகழும். “பொருள் வயின் பிரிவு முன்னோர் வைத்துச் சென்ற பொருளன்றித் தன் தாளாண்மையால் புதுப் பொருள் ஈட்டுதல் காரணமாகப் பிரியும் பிரிவாகும். இப்பிரிவின் நோக்கம் எள்ளுநர் இரந்தோர்க்கு ஈதலாகும்”[10] என்ற புலவர் குழந்தையின் உரை வழி அறிய முடிகிறது. இதனை,

> **“பொருள்வயின் பிரிதலும் அவர் வயின் உரித்தே”[11]**
> **(தொல்.,பொருள்.,அகம்.,நூ.35)**

என்ற தொல்காப்பிய நூற்பா தெளிவுறுத்துகிறது.

காதல் வாழ்வான களவு முற்றிக் கற்பு வாழ்க்கைக்கு வரும் பொழுது காதலர்கள் வாழ்வில் பிரிவுகள் நேரிடும். அவ்வாறான பிரிவுகளை நிலம் வழியாகச் செல்லும் காலிற் பிரிவு என்றும் கடல் வழியாகச் செல்லும் கலத்திற் பிரிவு என்றும் இரண்டாக வகைப்படுத்தி உள்ளனர். ‘‘எல்லா வகைகளிலும் உரிமைகளைப் பெற்றிருந்த தமிழக மகளிர்க்கு இந்த உரிமை மறுக்கப்பட்டதை நோக்குங்கால், நாட்டின் நலன் கருதியே மறுக்கப்பட்டுள்ளன’’[12] என்கிறார் சி.இலக்குவனார்.

தலைவன் பொருளீட்டுவதற்காகக் கடல் கடந்து செல்லவும், பாசறையில் தங்கிப் பகை விரட்டவும் உரிமை பெறுகிறான். தலைவி கற்பு,காப்புக்

காரணமாகப் பாசறைக்குச் செல்வது மறுக்கப்படுகிறது. புறப்பெண்டிர் தலைவனின் காமத்திற்காகச் செல்வது மறுக்கப்படவில்லை என்பதை உணர முடிகிறது. இதனை,

**"எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்"[13]**

**(தொல்.,பொருள்.,கற்பு.,நூ.173)**

**"புறத்தோர் ஆங்கண் புணர்வதாகும்"[14]**

**(தொல்.,பொருள்.,கற்பு.,நூ.174)**

என்று வருகின்ற தொல்காப்பிய நூற்பாக்களால் தெரிந்துகொள்ள முடிகின்றது.

இது பெரும்பாலும் அரசரை நோக்கிக் கூறியதாகும். சிறுபான்மை வீரனை நோக்கிக் கூறியதாகவும் கொள்ளலாம். "புறத்தோராவார் அரசர்க்குப் போரில் விருப்பத்தையும், ஊக்கத்தையும் ஊட்டும் ஏவல் பெண்டிர், கணிகையர் ஆகியோர் ஆவார்."[15] என்கிறார் ச.திருஞானசம்பந்தம். அரசர் போர் மேற்செல்லும் போது அவர்களும் உடன்சென்று ஊக்குவிப்பர். வீரருள்ளும் மறக்குடி வீரராயின் தம் வீரத்தை ஊக்குவிக்கும் விறலியர், துடிமகளிர், கிணை மகளிர் போல்வாரை உடன் அழைத்துச் செல்வர். அவர்கள் புண்பட்ட வீரர்களின் புண்ணை ஆற்றுதலும் செய்வர்.

தலைவி அல்லாத பிற மகளிர் வீரத்திலும், செயலிலும் துணிச்சலானவர்கள் என்பதால் அனுமதிக்கப்படுகிறார்கள். இப்பிரிவு தலைவனுக்கு வரையறை செய்யப்பட்டுள்ளது. அவ்வரையறைக்குள் தலைவன் இல்லத்திற்குத் திரும்பி வந்துவிட வேண்டும். இல்லறத்தில் வந்து மகிழ்ச்சியுடன் வாழ்தலே சாலச் சிறந்ததாகும்.

**பரத்தையர் பிரிவு**

ஊடலை அடிப்படையாகக் கொண்டே ஏற்படும் பரத்தையர் பிரிவு நாகரிகம் முதிர்ந்த அனைத்து நாடுகளிலும் தொடக்ககாலம் முதல் இருந்துள்ளது. உலகெங்கும் தோன்றி வளர்ந்த பரத்தமை ஒழுக்கம் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் மிகப் பழைய நூலாகிய தொல்காப்பியத்திலேயே குறிக்கப்பட்டுள்ளது.

பரத்தமை என்னும் வழக்கம் நாட்டுப்புறங்களை விட நகர்ப்புறங்களிலே தான் வளரத்தக்க சூழல் உண்டு. நகரங்கள் மிகுந்த நிலமாகப் பெரும்பாலும் மருத நிலமே காணப்படுகிறது. நகரங்கள் மிகுந்த மருதச் சூழலே பரத்தமை வளர ஏற்ற இடமாக இருந்தது எனலாம். நகரச்சூழல், செல்வவளம், கால ஓய்வு ஆகிய மூன்றுமே மருதத்தில் பரத்தமை இடம்பெறக் காரணம் எனலாம். பிற நிலங்களில் இது அருகியே காணப்படுகிறது"[16] என்கிறார் சாமி.சிதம்பரம்பிள்ளை.

பரத்தையர் குறித்த செய்திகள் தொல்காப்பியம் தொடங்கி இன்று வரை தொடர்ச்சியாகத் தமிழ் இலக்கியங்களில் பதிவாகியுள்ளன. மனைவியாகவும், தாயாகவும், கற்பைப் பாதுகாத்துக் குலமகளிர் விளங்க, ஆணினுடைய பாலியற் தேவைகளை நிறைவேற்றப் பரத்தையர் வாழ்ந்தனர். ஆண்களைத் தம்மிடம் தங்க வைக்கவும், அவர்களை இன்புறுத்தி மீண்டும் தம்மிடம் ஈர்த்துச் சேரவைக்கவும்

குலமகளிரிடம் இல்லாத திறன்களைப் பரத்தையர்கள் வளர்த்துக் கொண்டனர். ஆடலும், பாடலும், கலைகளும் இவர்களுக்குக் கைகொடுத்தன. உரையாசிரியர்களின் உரைகள் வழிகாமக்கிழத்தியர், இற்பரத்தை, சேரிப்பரத்தை ஆகியோர் குறித்து அறிந்துகொள்ள முடிகின்றது. உரையாசிரியர்கள் பாடலை விளக்கும் பொழுது, தலைமகன் பல பரத்தையை நாடிச் செல்கின்றான் என்பதையும், அவர்களுக்குள் இருக்கும் வேறுபாட்டினையும் எடுத்துக் காட்டுகின்றனர். காமக்கிழத்தி, இற்பரத்தை என ஒரு வகையினராகவும் சேரிப்பரத்தை மற்றொரு வகையினராகவும் காட்டப்பட்டுள்ளனர்.

இல்லற வாழ்விற்கு இடர்விளைவிக்கும் பரத்தமை பரவலாகச் சங்க இலக்கியத்தில் பேசப்படுகிறது. போரும் காதலும் தனிச்சிறப்பாகப் போற்றப்பட்ட சமுதாயத்தில் பரத்தமை தவிர்க்கப்பட இயலாத ஒன்றாகும் என்று சமூகவியலாளர் பறைசாற்றுவர்.

**பரத்தையின் வகை**

பரத்தையைக் காமக்கிழத்தி, இற்பரத்தை, சேரிப்பரத்தை என வகைப்படுத்துவர். இதனை, இளம்பூரணனார்.

‘‘தலைவியை மணந்து கொண்ட பின்பு தலைவனால் வேட்கை காரணமாக மணஞ்செய்து கொள்ளப்படும் மகளிர் காமக்கிழத்தியராவர். தலைவன் குலத்தோடு ஒத்த குலத்திற் பிறந்தவளும், அவனது குலத்தினும் தாழ்ந்த குலத்திற் பிறந்தவளும், பரத்தையரில் தலைவனால் வரைந்து கொள்ளப்பட்டவரும் எனக் காமக்கிழத்தியா் முத்திறப்படுவர். ஆடலும் பாடலும் வல்லராகி அழகும் இளமையுங் காட்டி இன்பமும் பொருளும் வெ.ஃகி ஒருவர்க்கும் உரிமை பூணாதாராய் வாழும் பொதுமகளிர் பரத்தையர் எனப்படுவர்’’[17]

**காமக்கிழத்தி (அ) காதல்பரத்தை**

பரத்தையருள் ஒரு வகையினராகக் கருதப்படும் காமக்கிழத்தியர், பரத்தையிலிருந்து வேறுபட்டவராகவே காட்டப்படுவதை ஐங்குறுநூற்று உரையில் பொ.வே.சோமசுந்தரனார் காதற் பரத்தையர், சேரிப்பரத்தையர் போன்று பொதுமகள் ஆகாமல் ஒருவனுக்கே உரிமை பூண்டொழுகுபவளாக காமக்கிழத்தி உள்ளாள் என்கிறார்.

குலப்பரத்தையர் மகளிராய்க் காமம் காரணமாகத் தலைமகனால் வரைந்து கொள்ளப்பட்டவர்கள் என்பதிலிருந்து காமக்கிழத்திக்குத் தலைமகனோடு திருமணம் நடைபெற்றதை அறிய முடிகிறது. ஊடலை அடிப்படையாகக் கொண்டே பரத்தையிற் பிரிவு ஏற்படுகிறது.

> **“பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்**
> **நீத்துஅகன் றுரையார் என்மனார் புலவர்**
> **பரத்தையிற் பிரிந்த காலையான”[18]**
> **(தொல்.,பொருள்.,கற்பு.,நூ.185)**

என்ற நூற்பாவின் வாயிலாகப் பூப்பு வெளிப்பட்ட நாளிலிருந்து பன்னிரண்டு நாள்களும் தலைவன் தலைவியை அணுகக்கூடாத நிலை இருந்ததை அறிய முடிகின்றது.

தலைவி தலைவனோடு சேர்ந்து வாழும் போது தான் சிறப்பிற்குரியவளாக எண்ணப்படுகிறாள். அப்பொழுது தான் அவளுக்கு விருந்து பேணலும், சுற்றம் பேணலும் அனுமதிக்கப்படுகிறது. தலைவி உயிரோடு இருக்கும்போதே தலைவன் மற்றொரு திருமணம் செய்து கொள்வதும் உண்டு.

தலைவன் தலைவியைப் போன்றே காமக்கிழத்தியையும் கரணத்தொடு கூடிய வதுவை முறைப்படி மணந்து கொள்வான். தலைவியை ஒத்த உணர்வுகள் காமக்கிழத்திக்கும் இருப்பதால் தலைவியை ஒத்த கூற்றுக்கள் நிகழும்.

தலைவனுக்குப் பரத்தமை ஒழுக்கம் அனுமதிக்கப்படுகிறது. தலைவி, தலைவனின் பரத்தமையைத் தடுக்கும் உரிமை இல்லை. அப்பொழுது அவள் ஊடல் கொள்ளலாம். அவனை அன்பில்லாதவன், கொடியவன் எனத் திட்டலாமே தவிர அவனை முழுமையாக மறுக்கும் உரிமை அவளுக்கு இல்லை. தலைவி பரத்தையரைத் தன் தங்கையர் என ஏற்றுக் கொள்ள வேண்டும். காமக்கிழத்தியரைத் தன் மகனின் தாய் என்று காட்ட வேண்டும். பரத்தையர், காமக்கிழத்தியர் இவர்கள் நலத்தைப் பாராட்டித் தலைவன் பேசும்பொழுது தலைவி பொறுத்துக் கொள்ள வேண்டும்.

> **“தாய்போற் கழறித்தழீஇக் கோடல்**
> **ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப**
> **கவவொடு மயங்கிய காலை யான”[19]**
> **(தொல்.,பொருள்.,கற்பு.,நூ.171)**

என வரும் நூற்பாவால் அறியலாம்.

காமக்கிழத்தி தலைமகனைத் திருமணம் செய்து கொண்டு, தலைவனின் இரண்டாம் மனைவியாக வாழ்கின்றாள் என்பது புலப்படுகிறது. காமக்கிழத்திக்குத் தலைவிக்கு இருக்கக்கூடிய அனைத்துக் கடமைகளும் உரிமைகளும் இருக்கின்றன.

போரும் பூசலும் இயல்பாக இருந்த சமூக அமைப்பில் ஆணின் இன்ப நாட்டத்தைத் தீர்த்துக் கொள்ளுவதற்காகப் பொருட்பெண்டிர் பாசறைக்குச் செல்வதற்குச் சமூக அங்கீகாரம் அளிக்கப்பட்டிருப்பதை உணர முடிகிறது.

## தொகுப்புரை

தொல்காப்பியத்தில், பொருளியல் குறித்த செய்திகளைக் காண முடிகிறது. பிரிவைத் தவிர்ப்பதற்குச் செலவழுங்கல் கூறப்பட்டுள்ளது. இதில் தலைவன் பிரிவால் தலைவி வருந்துவதால் தோழி மூலம் செலவழுங்கல் நிகழ்கிறது. ஓதற் பிரிவு முதன்மையாகக் கூறப்படுகிறது. இப்பிரிவு மட்டும் மூன்றாண்டுகள் கல்விக்காகப் பிரிவதாகும். மற்றவை அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என நால்வருணத்தாருக்கும் உரியவை ஆகும்.

பிற பிரிவாகிய பகை (அ) துணை(அ) வேந்தர்க்குற்றுழிப் பிரிவு இரண்டு வகைப்படும். அவை, தன் பகை, பிறர் பகை காரணமாக வரும் பிரிவு ஆகும்.

வேந்தனைத் தவிர ஏனையோர் அந்தணர், வணிகர், வேளாளர், என்பவராவர். இவர்கள் பகை மற்றும் காவலுக்குரியவராகக் கருதப்படுகிறார்கள்.

பொருள்வயிற் பிரிவு குறித்த செய்திகள் அகத்திணையியல் மற்றும் கற்பியல் ஆகிய இரண்டு இயல்களிலும்

கூறப்பட்டுள்ளன. இருப்பினும் வரிசைப்படுத்தாமல் அங்கொன்றும், இங்கொன்றுமாக நூற்பாக்கள் அமைந்துள்ளன. பரத்தை காரணமாகப் பிரியும் பிரிவு குறித்துக் கற்பியல் வழி அறிய முடிகிறது. ஆறு வகையான பிரிவுகள் குறித்த செய்திகளைத் தொல்காப்பியம் தெளிவாக எடுத்துரைக்கின்றது. இதன் வழி அக்காலத்தில் இருந்த பிரிவுகளையும் அதற்குரிய காலம் மற்றும் காரணம் ஆகியவற்றையும் அறிய முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**


1. சுப்புரெட்டியார் ந., தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, பக்.186
2. புலவர் குழந்தை, (உ.ஆ.,) தொல்காப்பியம் பொருளதிகாரம் கற்பியல், பக். 137
3. இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், நூற்பா. 183
4. துரை அரங்கசாமி மொ.சு., தொல்காப்பிய நெறி, பக். 216
5. இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா, 28
6. சாமி சிதம்பரனார், தொல்காப்பியர் தமிழர், பக். 124
7. இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா, 29
8. இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா, 32
9. இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா,30
10. புலவர் குழந்தை, (உ.ஆ.,) தொல்காப்பியம் பொருளதிகாரம் கற்பியல், பக். 354
11. இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா.35
12. இலக்குவனார் சி., தொல்காப்பிய ஆராய்ச்சி, பக். 190
13. இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், நூற்பா, 173
14. வெள்ளைவாரணர் க., தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், பக்.627
15. திருஞானசம்பந்தம் ச., தொல்காப்பியம், ப.184
16. சாமி சிதம்பரம் பிள்ளை, சங்க இலக்கியத்தில் பரத்தமை, பக். 7
17. இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், நூற்பா, 149.
18. இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், நூற்பா, 185.
19. இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், நூற்பா, 171.